# மாகாணத் திறைசேரி ~ வடமாகாணம்

# Provincial Treasury – Northern Province

පළාත් භාණ්ඩාගාරය උතුරු පළාත


My No:-NP/09/FRM/ 2009 Date:- 24.02.2009

**மாகாண திறைசேரி சுற்று நிருப இல:- PT/04/2009**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

## <u>வங்கிக்கணக்கு பேணுதலும் நிதிக்கட்டுப்பாடும்</u>

அரச நிறுவனங்களில் வங்கிக்கணக்குகளைப் பேணும் போது நிதிக்கட்டுப்பாடுகளைப் பின்பற்றவேண்டியமை மிகவும் இன்றியமையாததாகும். வங்கிக்கணக்கு தொடர்பான மாகாணநிதிப் பிரமாணங்கள் 111,238,239,240 ஆகியவற்றின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

மேற்படி மாகாண நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் ஒவ்வொரு கணக்குப் பொறுப்பு உத்தியோகத்தரும் தத்தமது வங்கிக்கணக்குகள் சம்பந்தமாக கட்டுப்பாடுகளைப் பேணுதல் மிகவும் இன்றியமையாததாகும். எனவே ஒவ்வொரு மாதமும் 20ம் திகதிக்கு முன் தமது வங்கிக்கணக்குகள் சம்பந்தமான முன்னைய மாத வங்கிக்கணக்கிணக்கக்கூற்றினை மாகாணத் திறைசேரிக்கு அனுப்பி வைத்தல் அவசியம். அத்துடன் வங்கிக்கணக்குகள் சம்பந்தமாக பின்வரும் மேலதிக கட்டுப்பாடுகளையும் கைக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றீர்கள்.

1. வங்கிக்கணக்கினை நடைமுறைப்படுத்தும் உத்தியோகத்தர்கள் ஆகக்கூடியது நால்வராக(4) இருப்பது விரும்பத்தக்கது. அதிக எண்ணிக்கையிலான உத்தியோகத்தர்கள் நிதி நிர்வாகத்திற்கு இடையூறாக அமையக்கூடும்.
2. காசோலைகள் எழுதும்போது காசோலையின் பின்புறம் எழுத்துப் பதியும் வகையில் காபன் வைத்து எழுதுவது விரும்பத்தக்கது. இந்நடைமுறை கணனி மூலம் காசோலை அச்சிடுவதாயின் அவசியமற்றது.
3. காசோலையின் அடியிதழ்களில் காசோலையுடன் தொடர்புடைய பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படல் இன்றியமையாததாகும்.
   - 3.1 காசோலைக்கு உரித்துடையவரின் பெயர்.
   - 3.2 தொகை.
   - 3.3 திகதி.
   - 3.4 காசோலையின் வழங்கு காலம்.
   - 3.5 உறுதிச்சீட்டு இலக்கம்.
   - 3.6 ஒப்பமிட்டவர்களின் முதலொப்பம்.
4. காசோலை தனிநபர் ஒருவரின் வங்கிக்ணக்கிற்கு எழுதும் போது காசோலையின் முகப்புப்புறத்தில் முழுவிபரமும் குறிப்பிடப்படல் வேண்டும்.


Kanniya Road, Varothaya Nagar, Trincomalee.

Phone No. DCS(F) Direct 026-2226974 General No – 026-3266503
Fax - 026 – 2226953 E-Mail – nptreasury@sltnet.lk

5. காசோலையானது வங்கி முகாமையாளரின் பெயரில், ஒரு நிறுவனம்/தனிநபரின் கணக்கிற்கு வரவு வைக்குமாறு எழுதப்படும் போது காசோலையின் முகப்பிலேயே கணக்கு விபரமும் எழுதப்படல் வேண்டும். பல நிறுவனம்/பலரின் கணக்குகளுக்கு வரவு வைக்குமாறு எழுதப்படுமாயின் மறுபுறத்தில் வரவு விபரங்கள் தெளிவுறக் குறிப்பிடப்படல் வேண்டும். அவ்விதம் எழுதமுடியாதவகையில் இடப்பற்றாக்குறை நிலவுமாயின் வரவு விபரங்கள் அடங்கிய பட்டியல் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அச் சந்தர்ப்பத்தில் காசோலையின் முகப்பில் வரவு விபரப்பட்டியல் இணைக்கப்பட்டமை பற்றிக்குறிப்பிடுவதுடன், காசோலையில் ஒப்பமிடும் உத்தியோகத்தர்கள் இருவராலும் அப்பட்டியல் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
6. காசோலை குறுக்குக் கோடிடுவது மட்டுமன்றி "Account Payee" எனும் பதம் பொறிக்கப்படல் விரும்பத்தக்கது.
7. காசோலை தனிநபரிற்கு வழங்கும்போது மறுபுறம் அவரின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தி வழங்குதல் விரும்பத்தக்கது.
8. மாதாந்தம் வங்கிக்கூற்று கிடைத்ததும் கணக்காளரால் அது பரிசீலனைக்குட்படுத்தப்பட்ட பின் விடயஎழுதுனரிடம் வங்கிக்கணக்கிணக்கக்கூற்று தயாரிப்பதற்காக ஒப்படைத்தல் ஏற்புடையது.
9. வங்கிக்கணக்கிணக்கக்கூற்று நிலுவையின்றித் தயாரித்தல் அவசியம் ஆகும்.
10. ஒன்றிற்கு மேற்பட்ட காசோலைப் புத்தகங்கள் ஒரே தடவையில் பாவனைக்குட்படுத்தல் கூடாது.
11. காசோலைப் புத்தக அடியிதழ்கள் தொடரிலக்கமிடப்பட்டு பாதுகாப்பாக வைத்தல் வேண்டும்.
12. ஒவ்வொரு கொடுப்பனவிற்காக காசோலையில் கையொப்பமிடப்படும் போதும் காசுப்புத்தகத்தில் முதலொப்பமிடப்படல் வேண்டும். அதே போன்று வைப்பிலிடும் வரவுகள் அனைத்தும் உடனுக்குடன் செவ்வைக்குட்படுத்தப்பட்டு காசுப்புத்தகத்தில் முதலொப்பமிடப்படல் வேண்டும். இந் நடைமுறை கணனிக்கூற்றினை காசுப்புத்தகமாகப் பேணும் அலுவலகங்களைப் பொறுத்தவரையில் சாத்தியமற்றது. எனினும் ஒவ்வொரு நாளின் முடிவிலும் அன்றாடம் மேற்கொண்ட கொடுப்பனவுகள், வரவுகள் செவ்வைக்குட்படுத்தப்பட்டு உறுதிப்படுத்தப்படல் அவசியம்.
13. கொடுப்பனவுகள் யாவும் காசோலை மூலம் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
14. எனவே தற்போதைய சூழ்நிலையில் மேற்படி நடைமுறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தப்படுகின்றீர்கள்.

*ஆ.செல்லத்துரை,*
*பிரதிப் பிரதம செயலாளர் - நிதி*
*பிரதம செயலாளரிற்காக*

பிரதிகள்:-

1. கௌரவ ஆளுனரின் செயலாளர்- வ.மா
2. பிரதிப் பிரதம செயலாளர் - மாகாணப் பொதுநிர்வாகம் – வ.மா
3. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - திருகோணமலை
4. பணிப்பாளர், மாகாணக் கணக்காய்வு - வ.ம

} தகவலுக்காக

Kanniya Road, Varothaya Nagar, Trincomalee.
Phone No. DCS(F) Direct 026-2226974 General No – 026-3266503
Fax - 026 – 2226953 E-Mail – nptreasury@sltnet.lk